# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1859/8 - 2014 අප්‍රේල් මස 22 වැනි අඟහරුවාදා - 2014.04.22

*1859/8 ஆம் இலக்கம் - 2014 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 22 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பீ. 21/1978* (xii)

**1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்**

27 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழான கட்டளை

*1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 27 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு, உயர்கல்வி அமைச்சர் திசாநாயக்க முதியான்சலாகே சுமணவீர பண்டா திசாநாயக்க ஆகிய நான், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் விதப்புரையின்மீது, (2011 ஆம் ஆண்டு யூன் மாதம் 24 ஆந் திகதிய 1711/24 ஆம் இலக்க, அதி விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளையினால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான), மேற்கூறப்பட்ட சட்டத்தின் 139 ஆம் பிரிவின் ஏற்பாடுகளினது பயனைக் கொண்டு சொல்லப்பட்ட சட்டத்தின் 21 ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட கட்டளையொன்றாகக் கருதப்பட்ட கட்டளையாகிய இலங்கை, ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தைத் தாபிக்கின்ற கட்டளையை, அதற்கான அட்டவணையில், , "பீடம்" என்ற தலைப்பின் கீழ் நிரல் I இல் காணப்படுகின்ற "பிரயோக விஞ்ஞான பீடம்" என்ற பதிவுக்கு நேரொத்ததாகவுள்ள "துறை" என்ற தலைப்பின் கீழ் நிரல் II இல் காணப்படுகின்ற எல்லாப் பதிவுகளுக்கும் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலம் இக்கட்டளையினால் திருத்துகின்றேன் :-*

| "நிரல் I<br>பீடம் | நிரல் II<br>துறை |
|---|---|
| பிரயோக விஞ்ஞான பீடம் | 1. கணிதத் துறை<br>2. பௌதீகவியல் துறை<br>3. இரசாயனவியல் துறை<br>4. தாவரவியல் துறை<br>5. வனவியல் சுற்றாடல் விஞ்ஞானத்துறை<br>6. விலங்கியல் துறை<br>7. கணினித் துறை<br>8. உணவு விஞ்ஞான தொழில்நுட்பத்துறை<br>9. புள்ளிவிபரத் துறை." |

திசாநாயக்க முதியான்சலாகே சுமணவீர பண்டா திசாநாயக்க,
உயர்கல்வி அமைச்சர்.

கொழும்பு,
*2014, ஏப்பிறல் 09.*

*5- 134*




இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.